**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

SRI LANKA IMMIGRATION AND EMIGRATION

# விலைமனுகோரல்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு சுத்தம் செய்தல் மற்றும் துப்பரவு சேவைகளை வழங்கும் சேவை வழங்குநர் ஒருவரை தெரிவுசெய்வதற்கான கொள்முதல்**
**ஒப்பந்த இலக்கம்(IFB): DIE/PRO/03/2024/115**

1. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கீழ்க் காட்டப்பட்ட அலுவலகங்களுக்காக சுத்தம் செய்வதற்கும், துப்பரவு செய்வதற்குமான சேவைகளை வழங்குவதற்காக, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால், தகைமையுள்ள சேவை வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
2.

| | |
|---|---|
| 1. | பிரதான அலுவலகம், "சுகுறுபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை. |
| 2. | கண்டி பிராந்திய அலுவலகம் |
| 3. | வவுனியா பிராந்திய அலுவலகம் |
| 4. | குருணாகல் பிராந்திய அலுவலகம். |
| 5. | மாத்தறை பிராந்திய அலுவலகம். |
| 6. | திருகோணமலை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை |
| 7. | கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை |
| 8. | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை |
| 9. | மத்தலை சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை |
| 10. | சர்வதேச விமான நிலையத்தின் ஓய்வறை |
| 11. | கொழும்புத் துறைமுக அலுவலகம். |
| 12. | காலி துறைமுக அலுவலகம். |
| 13. | வெலிசறை வெளிநாட்டவர் தடுப்பு முகாம் |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும். (NCB)

4. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுகுறுபாயா", 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் வைத்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பரீட்சிக்கலாம்.
தொடர்புகளுக்கு: தொலைபேசி இல: 011-2101559

5. மீளளிக்கப்படாத ரூபா எட்டாயிரம் (ரூ.8,000/-) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுகஹுறுபாயா", 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம், 2025.04.22 ஆம் திகதி தொடக்கம் 2025.05.08 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. "மூலப் பிரதி"**(Original)** "இணைப் பிரதி"**(Duplicate)** என்றவாறு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை **ரூ.400,000.00**பெறுமதியான விலைமனுக் காப்பீட்டுடன் 2025.05.09 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்5 ஆம் மாடி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைகூறல்கள் நிராகரிக்கப்படும். விலைமனுகோரல் நிறைவடைந்தவுடன் வருகைத்தருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னால் விலைமனுக்கள் திறக்கப்படும்

7. விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து (2025.05.09) நூற்று ஐந்து **105** நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலைமனுக்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

8. விலைமனு முன் சந்திப்பொன்று **2025.04.30** ஆம் திகதி பி.ப. **2.00** மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாயா", **5** ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நடைபெறும்.

தவிசாளர்
திணைக்கள கொள்முதல் குழு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
"சுஹுறுபாயா",
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.